**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**முன்னிலை : திரு.K.R.கண்ணன், பி.ஏ., பி.எல்.,**
**(J.O.CODE : TN01220),**
**கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 12 ம் நாள்**

**O.S. No. 411/2019**

**(மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்)**

**(O.S. No.102/2011)**

**CNR No. TNTI040038192019**

1. திரு. பி. கணபதி கவுண்டர் (இறப்பு)

2. திரு. ஜி. பாலசுப்பிரமணியம்

.... வாதிகள்

//எதிர்//

1.திருமதி. லட்சுமி

2.திருமதி. ராமாத்தாள்

3.திரு. சுப்பையன் (இறப்பு)

4.திரு. பொன்னுசாமி

5. சார் பதிவாளர், இணை I, திருப்பூர்

6.கிராம நிர்வாக அலுவலர், இடுவை கிராமம்

7. வட்டாச்சியர், திருப்பூர் தாலுகா

8. அரசுக்காக, அதன் மாவட்ட ஆட்சியர் தலைவர்

9. திருமதி. வளர்மதி

10.திரு. கமல்ராஜ்

11.திருமதி. கவிதா

12.திருமதி. வளர்மதி .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது நீதிமன்றத்தில் என் முன்பாக 09.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. சுரேஷ், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு. எம். தண்டபாணி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.ஆர். அரிகரன், பி.ஏ., பி.எல்., அவர்களும், 2,4,9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் திரு.ஆர். ரகுபதி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், கற்றறிந்த வாதி, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதங்கள், ஆவணங்கள், சாட்சியங்கள் ஆகியவற்றை பரிசீலித்து இவ்வழக்கில் இன்று நீதிமன்றம் வழங்கும்.

**<u>// தீர்ப்புரை //</u>**

திருத்தப்பட்ட வழக்குரையின் படி முதல் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி பெயரில் 19.05.2010 ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் ஆவணம் மற்றும் 2ம் பிரதிவாதி 19.05.2010 4ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் ஆவணம் செல்லாது, நடைமுறைக்கு வரவில்லை என்று விளம்புகை செய்யகோரியும் தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தை 1 முதல் 4 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எந்த ஒரு இடைஞ்சலோ, இடையூரோ ஏற்படுத்த கூடாது என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவாச் சொத்தை எந்த ஒரு வில்லங்க பாராதினம் ஏற்படுத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் மற்றும் 5ம் பிரதிவாதி 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவாச் சொத்தை பொறுத்து தாக்கல் செய்யும் ஆவணங்களை பதிவு செய்யகூடாது என்று ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம்

வழங்ககோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் செலவுத் தொகை கேட்டு, வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 07.04.2025 ம் தேதிய திருத்தப்பட்ட வழக்குரையின் படி வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :–

2.1) தாவாச் சொத்துக்கள் முதல் வாதிக்கு பாத்தியப்பட்டவை. முதல் வாதி அவருடைய மகனான 2ம் வாதி பெயரில் ஒரு பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். தாவாச் சொத்தை பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் சம்மந்தம் இல்லாத நபர்கள்.

2.2) தாவாச் சொத்து உண்மையில் முதல் வாதியின் தகப்பனார் பழனிகவுண்டர் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் இருந்து 07.09.1960 ம் தேதி கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணத்தின் படி முதல் வாதியின் தகப்பனாரிடம் தாவாச் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு அவருடைய இறப்பிற்கு பிறகு முதல் வாதி தாவாச் சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்து முதல் வாதி இறந்தபிறகு, 2ம் வாதி தற்சமயம் தாவாச் சொத்தில் தனிப்பட்ட சுவாதீன அனுபவத்திலிருந்து வருகிறார். தாவாச் சொத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் வாதி பெயரில் உள்ளது. வாதியும் அவருடைய தகப்பனாரும் 1960 ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக 50 வருடங்களுக்கு மேல் தாவாச் சொத்தில் தனிப்பட்ட உரிமையாளராக சுவாதீன அனுபவத்திலிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள்.

2.3) 22.05.1995 ம் தேதி நில அளவை மேற்கொள்ளப்பட்டு வட்ட சார்ஆய்வாளர் தாவாச் சொத்துக்களை பட்டா பாஸ் புக் சட்டம் 1986 ன் படி அளவுகள் மேற்கொண்ட பிறகு தனி வட்டாச்சியர் க.ச.எண். 115/9 பொறுத்து பட்டா வழங்கியுள்ளார். முதல் வாதி பட்டா பாஸ்புத்தகமும் மற்றும் கணினி பட்டா தாவாச்

சொத்தை பொறுத்து பெற்றுள்ளார். வாதி தாவாச் சொத்திற்கு 1986 முதல் 2010 வரை உள்ள அடங்கல் மற்றும் கந்தாய ரசீதுகள் தாவாவில் தாக்கல் செய்துள்ளார்.

2.4) தாவாச் சொத்து க.ச.எண். 115/9 ல் அமைந்துள்ளது. அந்த சொத்துக்கு உரிய பாதை க.ச.எண். 115/10 ல் ஒதுக்கப்பட்டு, அதன்அடிப்படையில் முதல் வாதி பெயருக்கு 1985ம் வருடம் பட்டா எண். 537 வழங்கப்பட்டுள்ளது. தாவாச் சொத்தை பொறுத்து முதல் வாதிக்கு 1960 ம் வருடம் உரிமை ஏற்பட்டு இன்று வரை சுவாதீன அனுபவம் ஆவணங்களின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது. தாவா 1,2 பிரதிவாதிகள் இறந்துபோன சுப்பைய கவுண்டரின் பெண் மக்கள். அவர்கள் 02.06.1910 ம் வருடத்து பாகப்பிரிவினைபடி தாவாச் சொத்தில் உரிமைகோருகிறார்கள்.

2.5) 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் பாகப்பிரிவினை மூலம் அவருக்கு கிடைத்த சொத்துக்கள் முழுவதையும் அவருடைய வாழ்நாளில் விற்பனை செய்துவிட்டார். முதல் வாதியின் தகப்பனார் 1960ம் வருடம் சுப்பைய கவுண்டரிடம் இருந்து சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். அதனால் தாவாச் சொத்துக்களான க.ச.எண். 115/9, 10 ல் 1,2 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான சுவாதீனம் இல்லாமல் வருவாய் ஆவணங்கள் 1910 முதல் 2010 வரை ஏற்படாமல் எந்த ஒரு மூல ஆவணங்கள் உரிமை எதுவும் இல்லாமல் மோசடியாக முதல் பிரதிவாதி அவருடைய கணவரான 3ம் பிரதிவாதி பெயரிலும் 2ம் பிரதிவாதி அவருடைய மகனான 4ம் பிரதிவாதி பெயரில் 19.05.2010 ம் தேதி திருப்பூர் இணை சார் பதிவாளர் 1 அலுவலகத்தில் மோசடியாக செட்டில் மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

2.6) 5ம் பிரதிவாதி ஆவணங்களை பதிவு செய்யும்அதிகாரம் உடைய நபர். 1,2 பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்துகளில் உரிமை மற்றும் 100 வருடங்களாக சுவாதீனத்தில் இல்லை என்பதை பரிசீலனை செய்ய தவறியுள்ளார். மேலும் பதிவு

சட்டத்தின் விதிமுறைகளின் படி கவனம் கொள்ளாமல் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட தானசெட்டில் மெண்ட் ஆவணங்களின் மூல ஆவணங்களை பார்வையிடாமல் வில்லங்கள் பரிசீலனை செய்யாமல் 1960 ம் வருடம் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்.

2.7) தாவா 6,7 பிரதிவாதிகள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாச்சியர் எந்த ஒரு முறையான விசாரணையும் முறையாக மேற்கொள்ளாமல் தவறுதலாக பட்டா எண். 65 மற்றும் 537 ல் வாதி பெயரில் நீக்குரவு செய்துள்ளார்கள். தாவாச் சொத்துக்களை வாதி விற்பனை செய்யவில்லை 1960 ம் ஆண்டிலிருந்து தனிப்பட்ட சுவாதீனத்தில் யிருந்து அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. பட்டா பாஸ் புக் சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் 7 ம் பிரதிவாதியும் சட்டத்திற்கு புறம்பாக கூட்டு சரி செய்து பட்டாவை பிரதிவாதிகளின் பெயர்களை சேர்த்துள்ளார். அவ்வாறு ஏற்பட்ட பட்டாவை வருவாய் நீதிமன்றத்தில் நீக்கம் செய்வதற்காக தனிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. 6,7 பிரதிவாதிகள் தாவாவிற்கு அவசிய தரப்பினர்கள், 8 ம் பிரதிவாதி 5 முதல் 7 பிரதிவாதிகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளார். அவர்களுக்கு எதிராக தாவாவில் பரிகாரங்கள் கோரப்படவில்லை. 8 ம் பிரதிவாதியும் தாவாவில் ஒரு தரப்பினராக தான் சேர்க்கப்பட்டுள்ளார்.

2.8) 01.02.2011 ம் தேதி 1 முதல் 4 பிரதிவாதிகள் செட்டில் மெண்ட் ஆவணம் மற்றும் பட்டாவின் அடிப்படையில் அத்துமீறி நுழைந்து தாவாச் சொத்தின் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்தும் வேறு நபர்களுக்கு சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சிக்கிறார்கள். முதல் வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் சரியான செக்கு பந்திகள் கண்டு ஏற்பட்டு இருந்தாலும் சொத்தின் சுவாதீனம் 1 முதல் 4 பிரதிவாதிகளால் வழுங்கப்படவில்லை. 1960 ம் வருடம் வாதிகளின் பெயரில் உள்ள ஆவணத்தில் சொத்துக்கள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் வாதி பெயரில் உள்ள

தானசெட்டில் மெண்ட் ஆவணங்களில் செக்குபந்திகள் சரியாக கொடுக்கப்படவில்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் சொத்தின் சுவாதீனத்தையும் வழங்கவில்லை. 1960 ம் வருட கிரைய ஆவணத்தில் வாதிகளுடைய பாகத்தை, எல்லைகள் 2010 ம் வருடம் சரியாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டது.

2.9) வாதிகள் வேறு வழியின்றி தாவாவை தாக்கல் செய்து தாவாச் சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள தானசெட்டில் மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யும் வேண்டியும். தாவா நிலுவையில் இருந்தபோது முதல் வாதி 22.03.2013 ம் தேதி 2 ம் வாதியான அவருடைய மகன் மற்றும் அவருடைய மனைவி, காளியம்மாள் அவர்களுடைய மகள்கள் தனலட்சுமி, ரத்தினாம்பாள், சகுந்தலா ஆகியோரை வாரிசுளாக விட்டு இறந்துபோனார். முதல் வாதி அவருடைய சொத்துக்களை பொறுத்து விருப்பு உறுதி ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். இரண்டாம் வாதிதான் தற்போது அவருடைய தாயாரை பராமரித்து பாதுகாத்து வருகிறார்.

2.10) 3 ம் பிரதிவாதி, கடந்த 29.07.2015 ம் தேதி இறந்துபோய் உள்ளார். 3 ம் பிரதிவாதியின் மனைவிதான் முதல் பிரதிவாதி. அவருடைய மகன் மாணிக்கராஜ் ஏற்கனவே இறந்துபோய்உள்ளார். அவருடைய மகள் தான் வளர்மதி, தாவாவில் 12 ம் பிரதிவாதி. இறந்துபோன மாணிக்கராஜின் மனைவி 9 ம் பிரதிவாதி வளர்மதி. 9 ம் பிரதிவாதிக்கு கமல் ராஜ் என்கிற மகன் உள்ளார். மாணிக்கராஜ்ன் கவிதா 10 மற்றும் 11 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2.11) ஆகையால், 3,4 பிரதிவாதிகள் பேரில் ஏற்பட்டுள்ள வாதி தானசெட்டில் மெண்ட் ஆவணம் எண். 4311/2010, 4314/2010 ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை செய்ய கோரியும், தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தை எந்த ஒரு இடையுறோ, இடைஞ்சலோ செய்ய கூடாது என்றும், 1 முதல் 4

பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பொருத்து வில்லங்க விற்பனை ஏற்படுத்த கூடாது என்று நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கேட்டும், 5ம் பிரதிவாதி 1 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்யும் ஆவணங்களை பதிவு செய்ய கூடாது என்று ஒரு செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இதர பரிகாரங்களும் மற்றும் செலவு தொகை கேட்டு தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1 மற்றும் 3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்.**

3.1) 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3.2) எதிர்வழக்குரை பத்தி 2 முதல் 7 ன் வாயிலாக தாவா வழக்குரை பொருண்மைகள் மறுக்கப்பட்டுள்ளது.

3.3) முதல் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் சகோதரி. 3ம் பிரதிவாதி, முதல் பிரதிவாதியின் கணவர். 4ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் மகன். தாவாச் சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பையகவுண்டருக்கு 02.06.1910 ம் வருடத்து பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட பரம்பரை சொத்தாகும். அதன்படி பாக சொத்துக்களை அவர் சுவாதீனம் பெற்று அனுபவம் செய்து வந்தார்.

3.4) 15.10.1967 ம் தேதி 2ம் பிரதிவாதியின் தகப்பனார் அவருடைய மகள்கள் 1,2 பிரதிவாதிகள் மற்றும் ஒரு மகன் பழனிசாமியை ஆகியோரை வாரிசுளாக விட்டு

சொத்துக்களை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துபோனார். பழனிசாமி, திருமணம் ஏற்படாமல் 20.03.1971 ம் தேதி இறந்துபோய் உள்ளார். அதனால் 1,2 பிரதிவாதிகள் மட்டும் தான் இறந்துபோன சுப்பையகவுண்டரின் வாரிசுதாரர்கள். திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 65/2007 ல் 30.10.2009 ம் தேதி 1,2 பிரதிவாதிகள் தான் வாரிசுதாரர்கள் என்று விளம்புகை செய்து உத்தரவிட்டுள்ளது. சுப்பைய கவுண்டர், இறந்தபிறகு அவருடைய சொத்துக்களை 1,2 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். அதன் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. அவர்கள் தான் தாவாச் சொத்திற்கு கந்தாயத்தை செலுத்தி ரசீதை பெற்றுள்ளார்கள். 1,2 பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்தாலும் தாவாச் சொத்தில் 2 வது பிரதிவாதிக்கு 1/3 பாகம் பாத்தியப்பட்டது.

3.5) 07.06.1960 ம் தேதி வாதியின் தகப்பனார் பழனிகவுண்டர் இடுவாய் கிராமம், க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தை கிரையமாக சுப்பைய கவுண்டரிடம் இருந்து 1,2 பிரதிவாதிகளின் கையொப்பம் பெறாமல் கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு ஏற்பட்டுள்ள ஆவணம் தாவா சொத்தும் 1,2 பிரதிவாதிகளுக்கு உள்ள சட்டப்படியான உரிமையை கட்டுப்படுத்தாது. அந்த ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் வாதி பழனிகவுண்டரின் ஒரே மகன் என்று பொய்யாக கூறிகொண்டு க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தை பொறுத்து உரிமை கோரியுள்ளார். க.ச.எண். 115 சொத்தில் வாதிக்கு 1/3 பாகமும், 1,2 பிரதிவாதிகளுக்கு 2/3 சொத்தில் உரிமையும், பாத்தியம் உள்ளது.

3.6) முருகசாமி கவுண்டரிடம் இருந்து சாவித்திரி ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணம் செல்லாது. அந்த ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை. வாதியை கட்டுப்படுத்தாது. நடைமுறைக்கு வராத ஆவணத்தின் அடிப்படையில் தான் வாதி

பழனிகவுண்டரின் மகன் என்ற அடிப்படையில் மோசடியாக அவர் இறந்த பிறகு க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்துக்கள் பொறுத்து மோசடியாக உரிமைகோருகிறார். தாவாச் சொத்துகளில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது. அதில் சுப்பையகவுண்டருக்கு 1/3 பாகம் உள்ளது. தாவாச் சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள 2/3 பாகம் கிரையத்தின் படி வாதிக்கு உரிமை ஏற்படாது.

3.7) 07.09.1960 ம் தேதி சாவித்திரியின் தகப்பனார் முருகசாமி கவுண்டரிடம் இருந்து 3.10 1/4 ஏக்கர் மற்றும் 0.15 செண்ட் பொது பாதை சர்வே எண்.115 இடுவாய் கிராமத்தில் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணம் சுப்பைய கவுண்டர் கையொப்பத்துடன் 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் இல்லை என்பதால் 1,2 பிரதிவாதிகளின் உரிமையை பொறுத்து அந்த கிரைய ஆவணம் செல்லாது. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் முருகசாமி மோசடியாக 29.07.2002 ம் தேதி அவருடைய மகள் சாவித்திரி மற்றும் ராமசாமி பெயரில் மோசடியான ஆவணங்களை ஏற்படுத்தி பதிவு செய்து உள்ளார். ராமசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் எண். 3221/2002 ன் படி 1.69 ஏக்கர் மற்றும் சர்வே எண். 115/2 ல் உள்ள அனைத்து சொத்துக்களையும் கிரைய ஆவணம் எண்.32220/2002 ன் படி சாவித்திரிக்கு ஏற்பட்டுள்ளது. அதில் 1.09 ஏக்கர் மற்றும் க.ச.எண். 115/2 0.02 செண்ட் க.ச.எண். 115/2 0.59 செண்ட் க.ச.எண். 114/1 ல் 0.59 செண்ட் விற்பனை ஏற்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணத்தின் படி தாவாச் சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு உள்ள உரிமை கட்டுப்படுத்தாது.

3.8) 18.09.1989 ம் தேதி பல்லடம் தாலுக்கா, பூமலர் கிராமத்தில் க.ச.எண்.89/2 ல் 7.20 ஏக்கர் சொத்துக்கள் சுப்பிரமணியம் என்பவரால் கிரையம் பெறப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தில் 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் இடவில்லை என்பதால் சட்டப்படி அந்த ஆவணங்கள்1,2 பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தில் உள்ள உரிமையை

கட்டுப்படுத்தாது. அந்த கிரைய ஆவணங்கள் அமலுக்கு வரவில்லை. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சுப்பிரமணியத்தின் வாரிசுதாரர்கள் நடராஜன், சண்முகசுந்தரம், மகேஸ்வரன், விவேகானந்தன், சௌந்தர்ராஜன், துரைசாமி ஆகியோர் அவர்களுடைய தகப்பனார் இறந்தபிறகு க.ச.எண். 89 ல் உரிமை கோருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த சொத்தில் கிரையப்படி 1/3 பாகம் மட்டும் பாத்தியப்பட்டது. மீதம் உள்ள 2/3 பாகத்தில் 1,2 வாதிகளுக்கு உரிமையில்லை.

3.9) தாவாச் சொத்துக்களை பொறுத்து எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை. ஆகையால், தாவா சொத்துக்களில் கூட்டாக 1,2 பிரதிவாதிகளுக்கு 2/3 பாக உரிமை உள்ளது. பல சமயங்களில் 2ம் பிரதிவாதி வாய்மொழியாக அவருக்குரிய பாகம் மட்டும் பிரித்துதனி சுவாதீனத்தை கேட்ட போது பஞ்சாயத்தாரை வைத்து பேசி முடிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு முடிவு எதுவும் ஏற்படவில்லை என்பதால் 2ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களை நான்கு சமபாகங்களாக பிரித்து அடையாளம் காண்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமனம் கோரியுள்ளார்.

3.10) அதனால் 2ம் பிரதிவாதி பாகப்பிரிவினையின் மூலம் தாவாச் சொத்துக்களை மூன்று சமபாகங்களாக பிரித்து தரகோரி முதன்மை சார்வு நீதிமன்றத்தில் அ.வ.எண். 305/2011 வாதி, ராமசாமி, சாவித்திரி, நடராஜன், சண்முக சுந்தரம், மகேஸ்வரன், விவேகானந்தம், சௌந்தர்ராஜன், துரைசாமிக்கு எதரிாக தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு இந்தவழக்கில் ஆவணங்கள் பொருத்து விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

3.11) தாவா சரியாக மதிப்பீடு செய்து, சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை. விளம்புகை பரிகாரத்திற்காக தாவாச் சொத்தின் மார்க்கெட்

மதிப்பின் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் சட்டம் பிரிவு 25(டி) மற்றும் பிரிவு 25(சி) ன் படி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு. இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க இந்த நீதிமன்றத்திற்கு பணவரவு அதிகாரம் இல்லை. தாவாவிற்கு வழக்குமூலமே இல்லை. வாதி தாவாச் சொத்தில் சுவாதீனத்தில் இல்லை. ஆகையால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

**4) 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்.**

4.1) 2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை, மேலும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

4.2) எதிர்வழக்குரை பத்தி 2 முதல் 7 ன் வாயிலாக தாவா வழக்குரை பொருண்மைகள் மறுக்கப்பட்டுள்ளது.

4.3) முதல் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் சகோதரி. 3ம் பிரதிவாதி முதல் பிரதிவாதியின் கணவர். 4ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மகன். தாவாச் சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பையகவுண்டருக்கு 02.06.1910 ம் வருடத்து பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட பரம்பரை சொத்தாகும். அதன்படி பாக சொத்துக்களை அவர் சுவாதீனம் பெற்று அனுபவம் செய்து வந்தார்.

4.4) 15.10.1967 ம் தேதி 2ம் பிரதிவாதியின் தகப்பனார் அவருடைய மகள்கள் 1,2 பிரதிவாதிகள் மற்றும் ஒரு மகன் பழனிசாமி ஆகியோரை வாரிசுளாக விட்டு சொத்துக்களை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துபோனார். பழனிசாமி திருமணம் ஏற்படாமல் 20.03.1971 ம் தேதி இறந்துபோய் உள்ளார். அதனால் 1,2 பிரதிவாதிகள் மட்டும் தான் இறந்துபோன சுப்பையகவுண்டரின் வாரிசுதாரர்கள். திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 65/2007 ல் 30.10.2009 ம் தேதி 1,2 பிரதிவாதிகள் தான் வாரிசுதாரர்கள் என்று விளம்புகை செய்து உத்தரவிட்டுள்ளது. சுப்பைய கவுண்டர் இறந்தபிறகு அவருடைய சொத்துக்களை 1,2 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். அதன் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது அவர்கள் தான் தாவாச் சொத்திற்கு கந்தாயத்தை செலுத்தி ரசீதை பெற்றுள்ளார்கள். 1,2 பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்தாலும் தாவாச் சொத்தில் 2வது பிரதிவாதிக்கு 1/3 பாகம் பாத்தியப்பட்டது.

4.5) 07.06.1960 ம் தேதி வாதியின் தகப்பனார் பழனிகவுண்டர் இடுவாய் கிராமம் க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தை கிரையமாக சுப்பைய கவுண்டரிடம் இருந்து 1,2 பிரதிவாதிகளின் கையொப்பம் பெறாமல் கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு ஏற்பட்டுள்ள ஆவணம் தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு உள்ள சட்டப்படியான உரிமையை கட்டுப்படுத்தாது அந்த ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் வாதி பழனிகவுண்டரின் ஒரே மகன் என்று பொய்யாக கூறிகொண்டு க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தை பொறுத்து உரிமை கோரியுள்ளார். க.ச.எண். 115 சொத்தில் முதல் வாதிக்கு 1/3 பாகமும் 1,2 வாதிகளுக்கு 2/3 பாக சொத்தில் உரிமையோ, பாத்தியமோ ஏற்படாது. அந்த ஆவணங்களின் அடிப்படையில் பழனிகவுண்டரின் ஒரே மகன் வாதி அவருடைய தகப்பனார் இறந்தபிறகு க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தில் உரிமை உள்ளதாக பொய்யாக

கூறிவருகிறார். வாதிக்கு அந்த சொத்தில் சுப்பையகவுண்டருக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகம் மட்டும் பாத்தியம். 2/3 பாக சொத்தில் வாதிக்கு உரிமை இல்லை.

4.6) 07.09.1960 ம் தேதி சாவித்திரியின் தகப்பனார் முருகசாமி இடுவாய் கிராமம் க.ச.எண். 115 ல் 3.10 1/4 ஏக்கர் மற்றும் 0.15 செண்ட் பொது பாதை கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணம் 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் இல்லை என்பதால் 1,2 பிரதிவாதிகளின் உரிமையை பொறுத்து அந்த கிரைய ஆவணம் செல்லாது. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் முருகசாமி மோசடியாக 29.07.2002 ம் தேதி அவருடைய மகள் சாவித்திரி மற்றும் ராமசாமி பெயரில் மோசடியான ஆவணங்களை தயார் செய்து பதிவு செய்துள்ளார். ராமசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் எண். 3221/2002 ன் படி 1.69 ஏக்கர் மற்றும் சர்வே எண். 115/2 ல் உள்ள அனைத்து சொத்துக்களையும், கிரைய ஆவணம் எண்.3220/2002 ன் படி சாவித்திரி பேரில் ஏற்பட்டுள்ளது. அதில் 1.09 ஏக்கர் மற்றும் க.ச.எண். 115/2 0.02 செண்ட் க.ச.எண். 115/2 0.59 செண்ட் க.ச.எண். 114/1 ல் 0.59 செண்ட் விற்பனை ஏற்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணங்களின் படி தாவாச் சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு உள்ள உரிமை கட்டுப்படுத்தாது.

4.7) 18.09.1989 ம் தேதி பல்லடம் தாலுக்கா, பூமலர் கிராமத்தில் க.ச.எண்.89/2 ல் 7.20 ஏக்கர் சொத்துக்கள் சுப்பிரமணியம் என்பவரால் கிரையம் பெறப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தில் 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் இடவில்லை என்பதால் சட்டப்படி அந்த ஆவணங்கள் 1,2 பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் உள்ள உரிமையை கட்டுப்படுத்தாது. அந்த கிரைய ஆவணங்கள் அமலுக்கு வரவில்லை. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சுப்பிரமணியத்தின் வாரிசுதாரர்கள் நடராஜன், சண்முகசுந்தரம், மகேஸ்வரன், விவேகானந்தன், சௌந்தர்ராஜன், துரைசாமி ஆகியோர் அவர்களுடைய தகப்பனார் இறந்தபிறகு க.ச.எண். 89 ல் உரிமை கோருகிறார்கள்.

ஆனால் வாதிகளுக்கு 1/3 பாகம் மட்டும் பாத்தியப்பட்டது. மீதம் உள்ள 2/3 பாகத்தில் 1,2 வாதிகளுக்கு உரிமையில்லை.

4.8) தாவாச் சொத்துக்களை பொறுத்து எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை. ஆகையால் தாவா சொத்துக்களில் கூட்டாக 1,2 வாதிகளுக்கு 1/3 பாக உரிமை உள்ளது. பல சமயங்களில் 2ம் பிரதிவாதி வாய்மொழியாக அவருக்குரிய பாகம் மட்டும் தனி சுவாதீனத்தை கேட்ட பிரித்து தரும்படி கேட்டபோது பஞ்சாயத்தாரை வைத்து பேசி முடிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு முடிவு எதுவும் தெரிவிக்காமல் 2ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களை நான்கு சமபாகங்களாக பிரித்து அடையாளம் காண்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமனம் பெற்றுள்ளார்.

4.9) அதனால் 2ம் பிரதிவாதி பாகப்பிரிவினையின் மூலம் தாவாச் சொத்துக்களை மூன்று சமபாகங்களாக பிரித்து தரகோரி முதன்மை சார்வு நீதிமன்றத்தில் அ.வ.எண். 305/2011 வாதி, ராமசாமி, சாவித்திரி, நடராஜன், சண்முக சுந்தரம், மகேஸ்வரன், விவேகானந்தம், சௌந்தர்ராஜன், துரைசாமிக்கு எதரிாக தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு இந்தவழக்கில் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளதால். இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

4.10) தாவா சரியாக மதிப்பீடு செய்து, சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை. விளம்புகை பரிகாரத்திற்காக தாவாச் சொத்தின் மார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் சட்டம் பிரிவு25(டி) மற்றும் பிரிவு 25(சி) ன் படி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு. இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க இந்த நீதிமன்றத்திற்கு பணவரவு அதிகாரம் இல்லை. தாவாவிற்கு வழக்குமூலமே இல்லை. வாதி தாவாச் சொத்தில்

சுவாதீனத்தில் இல்லை. ஆகையால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

**5. 7ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 6 மற்றும் 8 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்.**

5.1) இந்த பிரதிவாதி பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை, மேலும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

5.2) 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாவில் எந்த பரிகாரங்களும் கோரப்படவில்லை. ஆனால் தேவையற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரங்களும் கேட்காமல் தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

5.3) வாதி தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழ் உண்மையிலேயே ஏற்பட்டதா என்பதை வாதி நிருபணம் செய்யவேண்டும். இதற்கு முன்பு இருந்த சிறப்பு வட்டாச்சியர் 22.05.1995 ம் தேதி பட்டா எண். 65 பொறுத்து உட்பிரிவு செய்த சர்வே எண். 115/9 க்கு பரிசீலனை உரிய ஆவணங்கள் ஏற்கனவே அளிக்கப்பட்டுவிட்டது. ஆகையால் அதன் நம்பகதன்மை தற்போது சரிபார்க்கமுடியாது.

5.4) 01.01.1960 முதல் 31.12.1969 வரை சார் பதிவாளர் கொடுத்த வில்லங்க சான்றிதழ் 07.09.1960 ம் தேதிய கிரைய ஆவண எண். 2142/1960 குறிப்பிடப்படாமல் விடுப்பட்டு போனதால் தலைமையிட துணை வட்டாச்சியர் திருப்பூர் அவர்கள் RTR 1266/2010 ல் வாதியின் பெயரை விட்டுவிட்டு வருவாய் ஆவணங்களை மாற்றங்கள்

செய்துள்ளார். வாதி இதை பொறுத்து மனு தாக்கல் செய்தால் சட்டப்படி 6,7 பிரதிவாதிகள் அதில் முடிவு எடுக்க தயாராக உள்ளார்கள்.

5.5) தாவா வழக்குரை 10 மற்றும் 15 ல், வாதி வருவாய் துறை அதிகாரிகளிடம் தாவாச் சொத்தை பொறுத்து வருவாய் ஆவணங்களை மாற்றம் செய்து தரும் படி கொடுக்கப்பட்ட மனுவில் இந்த வழக்கின் முடிவின் அடிப்படையில் கருத்தில் கொள்ள முடிவு செய்துள்ளார். தாவா சரியாக மதிப்பீடு செய்து சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை. ஆகையால், தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

6. 9,10,12 ம் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்.

6.1) 9,10,12 ம் பிரதிவாதிகள் பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை, மேலும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

6.2) எதிர்வழக்குரை பத்தி 2 முதல் 7 ன் வாயிலாக தாவா வழக்குரை பொருண்மைகள் மறுக்கப்பட்டுள்ளது.

6.3) முதல் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் சகோதரி. 3ம் பிரதிவாதி முதல் பிரதிவாதியின் கணவர். 4ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மகன். தாவாச் சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பையகவுண்டருக்கு 02.06.1910 ம் வருடத்து பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட பரம்பரை

சொத்தாகும். அதன்படி பாக சொத்துக்களை அவர் சுவாதீனம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்.

6.4) 15.10.1967 ம் தேதி 2 ம் பிரதிவாதியின் தகப்பனார் அவருடைய மகள்கள் 1,2 பிரதிவாதிகள் மற்றும் ஒரு மகன் பழனிசாமி ஆகியோரை வாரிசுளாக விட்டு சொத்துக்களை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துபோனார். பழனிசாமி திருமணம் ஏற்படாமல் 20.03.1971 ம் தேதி இறந்துபோய் உள்ளார். அதனால் 1,2 பிரதிவாதிகள் மட்டும் தான் இறந்துபோன சுப்பையகவுண்டரின் வாரிசுதாரர்கள். 1,2 பிரதிவாதிகள் வாரிசுதாரர்கள் என்று திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 65/2007 ல் 30.10.2009 ம் தேதி விளம்புகை செய்து உத்தரவிட்டுள்ளது. சுப்பைய கவுண்டர் இறந்தபிறகு அவருடைய சொத்துக்களை 1,2 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். அதன் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது அவர்கள் தான் தாவாச் சொத்திற்கு கந்தாயத்தை செலுத்தி ரசீதை பெற்றுள்ளார்கள். 1,2 பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்தாலும் தாவாச் சொத்தில் 2 வது பிரதிவாதிக்கு 1/3 பாகம் பாத்தியப்பட்டது.

6.5) 07.06.1960 ம் தேதி வாதியின் தகப்பனார் பழனிகவுண்டர் இடுவாய் கிராமம் க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தை கிரையமாக சுப்பைய கவுண்டரிடம் இருந்து 1,2 பிரதிவாதிகளின் கையொப்பம் பெறாமல் கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு ஏற்பட்டுள்ள ஆவணம் தாவா சொத்தின் 1,2 பிரதிவாதிகளுக்கு உள்ள சட்டப்படியான உரிமையை கட்டுப்படுத்தாது. அந்த ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் வாதி பழனிகவுண்டரின் ஒரே மகன் என்று பொய்யாக கூறிகொண்டு க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தை பொறுத்து உரிமை கோரியுள்ளார். க.ச.எண். 115 சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் மட்டும் உரிமை ஏற்படும். 1,2

வாதிகளுக்கு 2/3 பாக சொத்தில் உரிமையோ, பாத்தியமோ ஏற்படாது. அந்த ஆவணங்களின் அடிப்படையில் பழனிகவுண்டரின் ஒரே மகன் வாதி அவருடைய தகப்பனார் இறந்தபிறகு க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தில் உரிமை உள்ளதாக பொய்யாக கூறிவருகிறார். வாதிக்கு அந்த சொத்தில் சுப்பையகவுண்டருக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகம் மட்டும் பாத்தியம். 2/3 பாக சொத்தில் வாதிக்கு உரிமை இல்லை.

6.6) 07.09.1960 ம் தேதி ஒரு முருகசாமி 3.10 1/4 ஏக்கர் மற்றும் 0.15 செண்ட் பொது பாதை சர்வே எண் 115 இடுவாய் கிராமத்தில் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணம் 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் இல்லை என்பதால் 1,2 பிரதிவாதிகளின் உரிமையை பொறுத்து அந்த கிரைய ஆவணம் செல்லாது. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் முருகசாமி மோசடியாக 29.07.2002 ம் தேதி அவருடைய மகள் சாவித்திரி மற்றும் ராமசாமி பெயரில் மோசடியான ஆவணங்களை தயார் செய்து உள்ளார். ராமசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் எண். 3221/2002 ன் படி 1.69 ஏக்கர் மற்றும் சர்வே எண். 115/2 ல் உள்ள அனைத்து சொத்துக்களையும் கிரைய ஆவணம் எண்.32220/2002 ன் படி சாவித்திரிக்கு பாத்தியப்பட்டது. அதில் 1.09 ஏக்கர் மற்றும் க.ச.எண். 115/2 0.02 செண்ட் க.ச.எண். 115/2 0.59 செண்ட் க.ச.எண். 114/1 ல் 0.59 செண்ட் விற்பனை ஏற்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணத்தின் படி தாவாச் சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு உள்ள உரிமை கட்டுப்படுத்தாது.

6.7) 18.09.1989 ம் தேதி பல்லடம் தாலுக்கா, பூமலர் கிராமத்தில் க.ச.எண்.89/2 ல் 7.20 ஏக்கர் சொத்துக்கள் சுப்பிரமணியம் என்பவரால் கிரையம் பெறப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தில் 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் இடவில்லை என்பதால் சட்டப்படி அந்த ஆவணங்கள் 1,2 பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் உள்ள உரிமையை

கட்டுப்படுத்தாது. அந்த கிரைய ஆவணங்கள் அமலுக்கு வரவில்லை. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சுப்பிரமணியத்தின் வாரிசுதாரர்கள் நடராஜன், சண்முகசுந்தரம், மகேஸ்வரன், விவேகானந்தன், சௌந்தர்ராஜன், துரைசாமி ஆகியோர் அவர்களுடைய தகப்பனார் இறந்தபிறகு க.ச.எண். 89 ல் உரிமை கோருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதில் 1/3 பாகம் மட்டும் பாத்தியப்பட்டது. மீதம் உள்ள 2/3 பாகத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது.

6.8) தாவாச் சொத்துக்களை பொறுத்து எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை. ஆகையால் தாவா சொத்துக்களில் கூட்டாக 1,2 வாதிகளுக்கு 1/3 பாக உரிமை உள்ளது. பல சமயங்களில் 2ம் பிரதிவாதி வாய்மொழியாக அவருக்குரிய பாகம் பிரித்து தனி சுவாதீனத்தை கேட்ட போது பஞ்சாயத்தாரை வைத்து பேசி முடிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு முடிவு எதுவும் தெரிவிக்காமல் 2ம் வாதி தாவாச் சொத்துக்களை நான்கு சமபாகங்களாக பிரித்து அடையாளம் காண்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமனம் பெற்றுள்ளார்.

6.9) அதனால் 2ம் பிரதிவாதி பாகப்பிரிவினையின் மூலம் தாவாச் சொத்துக்களை மூன்று சமபாகங்களாக பிரித்து தரகோரி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 305/2011 வாதி, ராமசாமி, சாவித்திரி, நடராஜன், சண்முக சுந்தரம், மகேஸ்வரன், விவேகானந்தம், சௌந்தர்ராஜன், துரைசாமிக்கு எதரிாக தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு இந்தவழக்கில் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

6.10) தாவா சரியாக மதிப்பீடு செய்து சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை. விளம்புகை பரிகாரத்திற்காக தாவாச் சொத்தின் மார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம்

சட்டம் பிரிவு25(டி) மற்றும் பிரிவு25(சி) ன் படி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு. இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க இந்த நீதிமன்றத்திற்கு பணவரவு அதிகாரம் இல்லை. தாவாவிற்கு வழக்குமூலமே இல்லை. வாதி தாவாச் சொத்தில் சுவாதீனத்தில் இல்லை. ஆகையால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

7) வாதி தாக்கல் செய்துள்ள தாவா வழக்குரை, ஆவணங்கள், பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை, இருதரப்பு வாதுரைகள், ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் 06.12.2012 கீழ்க்கண்ட எழுவினாக்கள் வணைப்பட்டது.

**<u>8) எழுவினாக்கள் :–</u>**

1. 19.05.2010 ம் தேதியிட்ட முதல் பிரதிவாதி மூன்றாம் பிரதிவாதிக்கு எழுதிய தானசெட்டில் மெண்ட் பத்திரம் 4311/2010 செல்லத்தக்கதா?

2. 19.05.2010 ம் தேதியிட்ட இரண்டாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதிக்கு எழுதிய தானசெட்டில் மெண்ட் பத்திரம் 4311/2010 செல்லத்தக்கதா?

3. வாதி கோரிய நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?

4. வாதி கோரிய செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?

5. வாதிக்கு கிடைக்கும் இதர பரிகாரங்கள் என்ன?

**9) 15.02.2021 ம் தேதி ஆவணங்களின் அடிப்படையில் கீழ்கண்ட கூடுதல் எழுவினாக்கள் வணையப்பட்டது.**

**கூடுதல் எழுவினாக்கள்**

1. வாதி கோரியவாறு விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

2. வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியா?

10) வாதி தரப்பில், இரண்டாம் வாதி பாலசுப்பிரமணியம் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.25 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், ஒரு பழனிசாமி த/பெ.கோபால் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு சா.சா.ஆ.X1 மற்றும் சா.சா.ஆ.X2 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு வாதி தரப்பு விசாரணை முடித்து வைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் நான்காம் பிரதிவாதி பொன்னுசாமி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படமால், பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

11) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் முன் தீர்ப்புகளை முன்னிலைப்படுதியுள்ளார். கற்றறிந்த 2,4,9,12 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தாவாச் சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட மூததையர் சொத்து அதில் 1, 2 பிரதிவாதிகளுக்கு வாரிசுகிரமபடிவும், மூததையர் சொத்துக்கள் என்பதில் சரிபாக உரிமை உள்ளது. அவ்வாறு உள்ள உரிமையை பொறுத்து தான் 1,2 பிரதிவாதிகள் தானசெட்டில் மெண்ட் ஆவணங்களை 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்தியுள்ளார்கள். 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட தானசெட்டில் மெண்ட் ஆவணங்கள் நடைமுறைக்கு வந்துள்ளது என்பதால் 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் ஆவணங்களை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று வாதுரைத்தார்.

12. கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தாவாச் சொத்தில் வாதி கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளதாலும் 3, 4 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில் மெண்ட் ஆவணத்தின் படி சொத்துக்கள் பாத்தியப்பட்டதால் வாதி தாவாவில் கோரியுள்ள நிரந்தர ஊறுத்துக்கட்டளை மற்றும் செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டிய

அவசியம் இல்லை என்று தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

13) கற்றறிந்த 2,4,9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த வாதங்கள் மற்றும் கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த எழுத்து பூர்வமான வாதுரை அதனுடன் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்தீர்ப்புகள் வழக்கு ஆவணங்கள் வழக்கு கோப்பு, ஆவணங்கள், சாட்சியங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**14) <u>எழுவினா எண் :– 1 ,2 மற்றும் கூடுதல் எழுவினா 1 –க்கான தீர்வு</u> :–**

**<u>எழுவினா 1</u> .** 19.05.2010 ம் தேதியிட்ட முதல் பிரதிவாதி மூன்றாம் பிரதிவாதிக்கு எழுதிய தானசெட்டில் மெண்ட் பத்திரம் 4311/2010 செல்லத்தக்கதா?

**<u>எழுவினா 2</u>** .19.05.2010 ம் தேதியிட்ட இரண்டாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதிக்கு எழுதிய தானசெட்டில் மெண்ட் பத்திரம் 4311/2010 செல்லத்தக்கதா?

**<u>கூடுதல் எழுவினா 1.</u>** வாதி கோரியவாறு விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

(இந்த மூன்று எழுவினாக்களும் ஒன்றுகொன்று தொடர்புடையவை என்பதால் இந்தமூன்று எழுவினாக்களும் ஒரு சேர விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு விடைகாணப்படுகிறது)

14.1) தாவா 1,2 பிரதிவாதிகள் சகோதரிகள். 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் சுப்பைய கவுண்டருக்கு 1,2 பிரதிவாதிகளை தவிர பழனிசாமி என்ற மகன் பிறந்து திருமணம் ஏற்படாமல் இறந்துபோய் உள்ளார். முதல் வாதி ஏற்படுத்திய பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 2ம் வாதி தாவாவில் சாட்சியம் அளித்துள்ளார். முதல் வாதி 23.03.2011 ம் தேதி ஏற்படுத்திய பொதுஅதிகார ஆவணம் வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ– 17, 18 ன் படி முதல் பிரதிவாதி லட்சுமி 3ம்

பிரதிவாதி சுப்பையன் பெயரிலும், 2ம் பிரதிவாதி ராமாத்தாள் 4ம் பிரதிவாதி பொன்னுசாமி பெயரில் ஏற்படுத்திய வா.சா.ஆ–17, 18 தானசெட்டில் மெண்ட் ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை செய்ய கோரி வாதி தாவாவில் பரிகாரம் கோரியுள்ளார். வா.சா.ஆ– 17, 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானசெட்டில் மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலை பரிசீலனை செய்து பார்க்கும் போது 3ம் பிரதிவாதியின் மணைவியான முதல் பிரதிவாதி தானசெட்டில் மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது தெரியவருகிறது.

14.2) வா.சா.ஆ–17 தானசெட்டில் மெண்ட் ஆவணத்தின் ஷரத்துக்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது முதல் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டருக்கு 02.06.1910 ம் தேதி ஏற்பட்ட பாகசாசனம் படி பாத்தியப்பட்டு தனியாக பிரிந்து சுவாதீன அனுபவத்தில் இருந்த சொத்துக்களை சுப்பைய கவுண்டர் இறந்தபிறகு வாரிசுகிரம படி பிதுராஜ்ஜிய வகையில் முதல் பிரதிவாதிக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்தில் க.ச.எண். 115/9, 10 சொத்தில் சரி பாதி சொத்தை தானசெட்டில் மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுப்பதாக ஷரத்துக்கள் காண்பபடுகிறது.

14.3) இரண்டாம் பிரதிவாதி அவருடைய மகனான நான்காம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ– 18 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ– 18 தானசெட்டில் மெண்ட் ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது வா.சா.ஆ–17 ல் சொல்லப்பட்டுள்ள அதே சரத்துக்கள் தான் வா.சா.ஆ–18 ல் சொல்லப்பட்டுள்ளது.

14.4) திருத்தப்பட்ட வழக்குரையின் படி வாதி தாவாச் சொத்துக்கள் 07.09.1960 ம் வருட பாகப்பிரிவினை படி முதல் வாதியின் தகப்பனார் பழனிகவுண்டர் கிரையம்

பெற்றதாக வாதுரைத்துள்ளார். அந்த கிரைய ஆவணத்தில் சான்றிட்ட நகல் வா.சா.ஆ– 2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ– 2 கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் சுப்பைய கவுண்டர் அவருக்காகவும், அவருடைய இளவர் மகன் பழனிசாமிக்கும் சேர்த்து இடுவாய் கிராமம், க.ச.எண். 115 ல், 1.80 ஏக்கர் சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ– 2 கிரைய ஆவணத்தில் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கு பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்டு அவருடைய சுவாதீன அனுபவத்திலிருந்தாக குறிப்பிட்டு கிரையம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பழனிகவுண்டர் பெயரில் கிரையம் ஏற்பட்டு அவருடைய காலத்திற்கு பிறகு அவருடைய மகன் கணபதி கவுண்டர் பெயரில் பசலி 1393 ன் படி ஏற்ப்பட்ட பட்டா அசல் வா.சா.ஆ–3 ஆக ஏற்பட்டுள்ளது. பழனிகவுண்டர் மகன் கணபதி கவுண்டர் க.ச.எண். 115/9 ற்குரிய பட்டா பாஸ்புத்தகத்தின் அசல் வா.சா.ஆ– 4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ– 4 ல் க.ச.எண். 115/9 சொத்து தனிப்பட்டா என்று குறிப்பிட்டு வருவாய் துறையினர் வழங்கியுள்ளார்கள்.

14.5) அதே போல் கணபதி கவுண்டர் பெயரில் க.ச.எண். 115/9 ற்குரிய பட்டா எண். 65 ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ– 5 ஆகவும், கந்தாய ரசீதுகள் வா.சா.ஆ– 7 முதல் 15 ஆக தாக்கல் செய்யப்ட்டுள்ளது. 1,2 பிரதிவாதிகள் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு 02.06.1910 ம் தேதிய பாகப்பிரிவினை படி பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளனர். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–16 ஆக தாக்கல் செய்யப்ட்டுள்ளது. வா.சா.ஆ–16 ன் படி பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களின் ஒரு பகுதியை தான் வா.சா.ஆ– 2 ன் மூலம் சுப்பைய கவுண்டர் பழனிகவுண்டருக்கு விற்பனை செய்துள்ளார். ஆனால் 1, 2 பிரதிவாதிகள் அவ்வாறு ஏற்பட்ட ஆவண விவரங்களை மறைத்து சுப்பைய கவுண்டர் இறந்தபிறகு வாரிசுகிரம

படி, பிதுராஜ்ஜிய படியும் பாத்தியப்பட்ட சொத்துக்களை வா.சா.ஆ– 17,18 ஆவணங்கள் மூலம் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் 1,2 பிரதிவாதிகள் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார்கள். ஆனால் சுப்பைய கவுண்டர் உயிருடன் இருக்கும்போது தாவாச் சொத்துக்களை வா.சா.ஆ– 2 ன் மூலம் விற்பனை செய்த பிறகு 1,2 பிரதிவாதிகளுக்கு சுப்பைய கவுண்டர் வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையிலோ பிதுராஜ்ஜிய வகையிலோ எந்த ஒரு உரிமையும் பாத்தியமும் தாவா சொத்தில் வா.சா.ஆ– 17, 18 ன்படி ஏற்படாது.

14.6) 2ம் வாதி வா.சா.ஆ–1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 12.10.2017 ம்தேதி குறுக்கு விசாரணையில் 1,2 பிரதிவாதிகள் சுப்பைய கவுண்டரின் மகள்கள் என்பதையும், தாவாச் சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் சுப்பைய கவுண்டருக்கு 20.07.1910 ம் வருட பாகப்பத்திரன் படி பாத்தியப்பட்டது என்பதையும், 07.09.1960 ம் தேதியில் 2ம் வாதியின் பாட்டனார் பழனிகவுண்டருக்கு சொத்துக்கள் விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டுள்ளார். 07.09.1960 ல் சுப்பைய கவுண்டரின் மகள்களான 1,2 பிரதிவாதிகள் பிறந்துவிட்டார்கள் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். 07.09.1960 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் 1,2 பிரதிவாதிகள் கையொப்பம்யிடவில்லை என்பதை ஒப்புக்கொண்டு அவர்கள் இளவர்களாக இருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். தாவாச் சொத்தில் உரிமையிருந்ததால் தான் அவர்களுக்கும் சேர்த்து சுப்பைய கவுண்டர் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை மறுக்கவில்லை தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14.7) 12.11.2024 ம் தேதிய குறுக்கு விசாரணையில் தானசெட்டில் மெண்ட் படி மொத்த விஸ்தீரணம் 2.62 ஏக்கர், அதற்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று

சாட்சியம் அளித்துள்ளார். ராமாத்தாள் மற்றும் லட்சுமி பெயரில் வட்டாச்சியர் தவறாக பட்டா வழங்கியுள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். 2 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள தானசெட்டில் மெண்ட் பத்திரம் சரியானது என்பதை மறுத்துள்ளார். 1,2 பிரதிவாதிகள் கையொப்பம் பெறாமல் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் செல்லாது என்பதையும் மறுத்துள்ளார். கிரையம் பெற்ற சொத்துக்கள் மற்றும் 1,2 பிரதிவாதிகள் குடும்ப சொத்தை பொறுத்து அ.வ.எண். 305/2011 ல் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. அந்த தாவாவில் தான் சரியான தீர்வு ஏற்படும் என்பதை மறுக்கவில்லை, தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14.8) அ.வ.எண். 305/2011 ல் 1,2 பிரதிவாதிகளுக்கு அவருடைய தகப்பனார் சுப்பைய கவுண்டரின் சொத்துக்களில் பாக சொத்துக்களில் எந்த ஒரு பாக உரிமை ஏற்படாது என்று நீதிமன்றம் முடிவு செய்து முதல் பிரதிவாதி வாதியாக இருந்து தாக்கல் செய்த அ.வ.எண். 305/2011 இன்று தள்ளுபடி செய்து விடைகண்டுள்ளது.

14.9) வாதி தரப்பில் வாதியின் தகப்பனார் 24.01.2013 ம் தேதி ஏற்படுத்திய விருப்புறுதி ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த பழனிசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.ஆ– 2 03.12.2024 ம் தேதிய குறுக்கு விசாரணையில் தாவாச் சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியாது. சுப்பைய கவுண்டர் பெயரில் உள்ள ஆவணங்களை பார்த்தது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14.10) 1,2 பிரதிவாதிகள் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் சொத்துக்கள் ஏற்கனவே 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது விற்பனை செய்துவிட்டார் என்பதை பொறுத்து கிரைய ஆவணங்களை தாக்கல் செய்த பிறகு, 1,2 பிரதிவாதிகள் 3,4 பிரதிவாதிகள் பெயரில் மோசடியாக தானசெட்டில் மெண்ட் ஆவணம்

ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று வாதி வாதுரைத்துள்ள சூழ்நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகள் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட வா.சா.ஆ–17, 18 தானசெட்டில் மெண்ட் ஆவணங்கள் உண்மையாக எற்பட்டது என்பதை நிரூபணம் செய்யவேண்டிய கட்டாயத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் தள்ளப்படுகிறார்கள்.

14.11) ஆனால் 1 முதல் 4 பிரதிவாதிகள் 1,2 பிரதிவாதிகள் 3,4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திய அசல் தானசெட்டில் மெண்ட் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும், சுப்பைய கவுண்டர் பெயரில் உள்ள அசல் பாகப்பிரிவினை பத்திரத்தையும் தாக்கல் செய்ய தவறியுள்ளார்கள். ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில் மெண்ட் ஆவணம் மோசடியாக ஏற்பட்டுள்ளது என்று வாதி கட்சி செய்தபிறகு வா.சா.ஆ–17, 18 தானசெட்டில் மெண்ட் ஆவணங்கள் உண்மையாக ஏற்பட்டது என்பதை செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த சாட்சிகளை 1 முதல் 4 பிரதிவாதிகள் விசாரித்து தானசெட்டில் மெண்ட் ஆவணம் உண்மையாக ஏற்பட்டது என்பதை நிரூபனம் செய்ய தவறியுள்ளார்கள்.

14.12) பிதுராஜ்ஜிய சொத்துக்களில் சுப்பைய கவுண்டரின் பெண் மக்களான 1,2 பிரதிவாதிகளுக்கு இந்து வாரிசு உரிமை திருத்தப்பாடு சட்டம் 2005 ன் படி சரிபாக உரிமை ஏற்படும். Sec 6 of Hindu Succession Act,

<u>Sec 6;</u> Devolution of interest in coparcenary property.-(1) On and from the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005, in a Joint Hindu family governed by the Mitakshara law, the daughter of a coparcener shall,-
(a) by birth become a coparcener in her own right in the same manner as the son;
(b) have the same rights in the coparcenary property as she would have had if she had been a son;
(c) be subject to the same liabilities in respect of the said coparcenary property as that of a

son, and any reference to a Hindu Mitakshara coparcener shall be deemed include a reference to a daughter of a coparcener:

Provided that nothing contained in this sub-section shall affect or invalidate any disposition or alienation including any partition or testamentary disposition of property which had taken place before the 20th day of December, 2004.

ஆனால் 2005 ம் வருடத்திற்கு முன்பே 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் 1910 ம் வருடம் பாகப்பிரிவினை மூலம் பிரிந்து வந்த சொத்துக்களை 1960 ம் வருடம் விற்பனை செய்தபிறகு சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜிய சொத்துக்கள் எதுவும் 20.12.2004 ம் தேதி இல்லாத சூழ்நிலையில் 1,2 பிரதிவாதிகள் க.ச.எண். 115/9, 10 சொத்துக்களை பொறுத்து தானசெட்டில் மெண்ட் ஆவணம் ஏற்படுத்த உரிமை இல்லை என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

14.13) மேலும் அ.வ.எண். 305/2011 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் சுப்பைய கவுண்டருக்கு பாகப்பிரிவினையின் மூலம் கிடைக்கபெற்ற சொத்துக்களில் சுப்பைய கவுண்டரின் மகள்களுக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்று முடிவு செய்து முதல் பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண். 305/2011 பாகப்பிரிவினை தள்ளுபடி செய்து தீர்வு காணப்பட்டுள்ளதால் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து எந்த உரிமையும் பாத்தியமும் இல்லாமல் வா.சா.ஆ– 17, 18 ஆவணங்களில் ஏற்டுத்தி பதிவு செய்ததின் படி 3,4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் பாத்தியமும் ஏற்படாது என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

14.14) ஆகையால் மேலே விவாதித்தன் அடிப்படையிலும் அ.வ.எண். 305/2011 எழுவினாக்களில் விவாதித்து விடைகண்டதன்படி க.ச.எண். 115/9, 10 சொத்துக்களில் 1,2 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும், பாத்தியமும் இல்லை என்பதால் 1,2

பிரதிவாதிகள் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் 19.05.2010 ம் தேதிய ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் ஆவண எண்கள் 4311/2010 மற்றும் 4314/2010 சட்டப்படி செல்லாத ஆவணங்கள் என்று இந்த எழுவினா மூலம் வாதிகளுக்கு ஆதரவாக விடைகாணப்படுகிறது.

15) <u>எழுவினா எண் :– 3–க்கான தீர்வு</u> :–

<u>எழுவினா 3</u>. வாதி கோரிய நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?

15.1) முன் எழுவினாக்களில் தாவாச் சொத்துக்களை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லாது என்று விடைகாணப்பட்டுள்ளது. 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் சுப்பைய கவுண்டர் உயிருடயிருந்தபோதே க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்தை வா.சா.ஆ– 2 ன் படி பழனிகவுண்டருக்கு விற்பனை செய்துள்ளார்.

15.2) அவ்வாறு பழனிகவுண்டர் சொத்துக்களை கிரையம் பெற்று சுவாதீனம் அடைந்தபிறகு, அவருடைய மகனாக முதல் வாதி சொத்துக்களை அனுபவம் செய்து வந்துள்ளார் என்பது வா.சா.ஆ– 3 முதல் வா.சா.ஆ– 15 வருவாய் ஆவணங்களின் படி நிருபணம் ஏற்படுகிறது. ஆகையால் தாவாச் சொத்தில் முதல் வாதி இறந்தபிறகு அவருடைய மகன் என்ற அடிப்படையில் இரண்டாம் வாதி விருப்புறுதி ஆவணத்தின் படி உரிமைப்பெறுகிறார். ஆகையால், இத்தகைய சூழ்நிலையில் தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் சொத்துக்களை அனுபவம் செய்வதை எந்த ஒரு உரிமையும் இல்லாத 1 முதல் 4, 9 முதல் 12 பிரதிவாதிகளோ அவரது ஆட்களா தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீனத்தை எந்த ஒரு இடைஞ்சலோ, இடையூரோ செய்வது சட்டப்படி தவறு என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

15.3) மேலும், தாவாச் சொத்தின் சுவாதீனத்தை உரிமை மற்றும் வருவாய் ஆவணங்கள் மூலம் வாதிகள் நிருபணம் செய்து அதன்படி சுவாதீனத்தை பொறுத்து வாதிகளின் புறம் balance of conveyance வாதியின் புறம் அமைந்துள்ளதால், தாவா சொத்தில் வாதிகளின் அமைதியான சுவாதீனத்தை 1 முதல் 4, 9 முதல் 12 பிரதிவாதிகள் எந்த ஒரு இடையூரோ, இடைஞ்சலோ செய்ய கூடாது என்று நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க தவறினால் வாதிகளுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்று முடிவு செய்து நீதியின் நலன் கருதி தாவாச் சொத்தில் 2ம் வாதியின் சுவாதீன அனுபவத்தை 1 முதல் 4, 9 முதல் 12 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எந்த ஒரு இடையூரோ, இடைஞ்சலோ செய்ய கூடாது என்று நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவதே சட்டத்தின்பால் சிறந்தது என்று முடிவு செய்து வாதி கோரியவாறு ஒரு நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி இந்த எழுவினாவும் வாதிகளுக்கு ஆதரவாக விடைகாணப்படுகிறது.

15.4) முன் எழுவினாக்களில் தாவாச் சொத்துக்களில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எந்த பாக உரிமையும் ஏற்படாது என்று முடிவு செய்தும், முதல் மற்றும் இரண்டாம் பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்து உட்பட அவருடைய தகப்பனாருக்கு 1910 ம் வருடம் பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்துக்களின் 1,2 பிரதிவாதிகளுக்கு எந்த பாக உரிமையும் ஏற்படாது என்று விடைகாணப்பட்டுள்ளது.

15.5) 1,2 எழுவினாக்களில் 1,2 பிரதிவாதிகள் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திய செட்டில் மெண்ட் ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்று விடைகாணப்பட்டுள்ளது. அந்த செட்டில் மெண்ட் ஆவணங்கள் படி 1,2 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்பதால் தாவாச் சொத்தை பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் எந்த ஒரு வில்லங்க விவகாரமும் ஏற்படுத்தகூடாது

என்று வாதி கோரியவாறு ஒரு நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி என்று இந்த எழுவினாவும் வாதிகளுக்கு ஆதரவாக விடைகாணப்படுகிறது.

**16.) <u>எழுவினா எண் :– 4–க்கான தீர்வு</u> :–**

**<u>எழுவினா 4.</u>** வாதி கோரிய செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?

வாதி 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவாச் சொத்தை பொறுத்து தாக்கல் செய்யும் எந்த ஒரு ஆவணத்தையும் 5ம் பிரதிவாதியான, திருப்பூர் இணை 1 சார்பதிவாளர், எந்த ஒரு பதிவும் செய்யக்கூடாது என்று செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரத்தை கோரியுள்ளார். சார்பதிவாளர் அவருடைய ஆள்வகைக்குள் வரும் சொத்துக்களை பொறுத்து பதிவு சட்டத்தின் படி பதிவு கட்டணங்கள் மற்றும் சரியான உரிமை ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் அந்த ஆவணங்களை பதிவு சட்டத்திற்கு உட்பட்டு அவருடைய பதிவு ஏற்படுத்தவேண்டியது அவருடைய சட்டரீதியான கடமை (statutory duty) ஆகும். அவ்வாறு பதிவு செய்யப்படும் ஆவணங்கள் சரியானதா என்பதை முடிவு செய்வது தான் நீதிமன்றத்தின் அதிகார வரம்பாகும். ஆகையால், சார் பதிவாளரின் சட்டரீதியான கடமை (statutory duty) செய்யக்கூடாது என்று செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரம் வாதி கோரியவாறு வழங்கமுடியாது என்று முடிவு செய்து வாதிகோரிய செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரம் நிராகரிக்கப்பட்டு என்று இந்த எழுவினா வாதிகளுக்கு எதிராக விடைகாணப்படுகிறது.

**<u>17) கூடுதல் எழுவினா 2 க்கான தீர்வு :–</u>**

<u>எழுவினா</u>2. வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியா?

வாதிகள் தாவாவில் 1,2 பிரதிவாதிகள், 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திய கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்பதற்காக தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 25(d) ன் படி ரூ. 2000 என்று கணக்கிட்டு அதன் தொடர்ச்சி பரிகாரமான

நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும் சேர்ந்து நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளர்கள். 1,2 பிரதிவாதிகள் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் ஆவணத்தில் வாதிகள் தரப்பினர்களாக இல்லை என்பதால் வாதிகள் தாவாவில் விளம்புகை மற்றும் நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக சரியாக மதிப்பீடு செய்து வாதிகள் தாவாவில் கோரியுள்ள பரிகாரங்களுக்காக சரியான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள் என்று இந்த எழுவினாவும் இவ்வாறு விடைகாணப்படுகிறது.

<u>18) எழுவினா 5 க்கான தீர்வு :–</u>

<u>எழுவினா 5</u>. வாதிக்கு கிடைக்கும் இதர பரிகாரங்கள் என்ன?

18.1) முன் எழுவினாக்களில் வாதிகோரிய விளம்புகை மற்றும் நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வழங்கப்பட்டும் செயல்ஊறுத்துக்கட்டளை பரிகாரம் நிராகரிக்கப்பட்டுள்ளதால் வாதிகளுக்கு வேறு எந்த பரிகாரமும் வழங்கவேண்டியதில்லை என்று இந்த எழுவினா இவ்வாறு விடைகாணப்படுகிறது.

முடிவாக, தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் 19.05.2010 ம் தேதி ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் ஆவண எண்கள்4311/2010, 4314/2010 சட்டப்படி செல்லாது என்று விளம்புகை செய்தும், தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தை 1 முதல் 4 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எந்த ஒரு இடைஞ்சலோ, இடையூரோ செய்ய கூடாது, தாவாச் சொத்தை பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் எந்த ஒரு வில்லங்க விவகாரங்களும் ஏற்படுத்தகூடாது என்று நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வழங்கியும், வாதி கோரிய செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரம் நிராகரிக்கப்பட்டு செலவுத் தொகையுடன் தீர்ப்பு அளிக்கப்படுகிறது. 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், **இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம்** நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.26 18:36:11 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**1. வாதி தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு. பாலசுப்பிரமணியம் த/பெ. கணபதி கவுண்டர் |
| வா.சா.2 | திரு. ஜி. பழனிசாமி த/பெ. கோபால் |

**2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 23.03.2011 | பாலசுப்பிரமணியம் பெயரில் உள்ள பொது அதிகாரப்பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.2 | 07.09.1970 | பழனிகவுண்டர் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | | பசலி 1593 க்கான கந்தாய ரசீது –அசல் |
| வா.சா.ஆ.4 | | பழனிகவுண்டர் பெயரில் உள்ள பட்டா பாஸ்புக்கின் அசல் |
| வா.சா.ஆ.5 | | 21.12.2009 இடுவாய் கிராமம் க.ச.எண். 115/9 பட்டா எண். 65 ற்குரிய கணினி சிட்டா |
| வா.சா.ஆ.6 | 23.04.1986 | பசலி 1395 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.7 | 21.03.1990 | பசலி 1393 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.8 | 03.03.1991 | பசலி 1400 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.9 | 16.03.1992 | பசலி 1401 ற்கான கந்தாய ரசீதின் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.10 | 18.05.1993 | பசலி 1402 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.11 | 12.03.1994 | பசலி 1403 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.12 | 13.02.1998 | கந்தாய ரசீது அசல் |
| வா.சா.ஆ.13 | 02.02.2006 | பசலி 1415 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.14 | 06.02.2008 | பசலி 1417 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.15 | 20.04.2010 | பசலி 1419 ற்கான கந்தாய ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.16 | 02.06.1910 | கந்தப்ப கவுண்டர் மக்கள் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.17 | 19.05.2010 | சுப்பையன் பெயரில் லட்சுமி ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் பத்திரம் |
| வா.சா.ஆ.18 | 19.05.2010 | பொன்னுசாமி பெயரில் ராமாத்தாள் ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் பத்திரம் |
| வா.சா.ஆ.19 | 05.10.2011 | மங்கலம் காவல் நிலையம் குற்ற எண். 1887 முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.20 | 12.10.2010 | 1.1.1959 முதல் 31.07.1973 வரை உள்ள வில்லங்க சான்றிதழ் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.21 | 05.10.2011 | மங்கலம் காவல் நிலையம் குற்ற எண். 1887 முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.22 | 27.01.2017 | திருப்பூர் தெற்கு இடுவாய் கிராமம் க.ச.எண். 115/9 பட்டா எண். 65 ற்குரிய சிட்டா கணினி நகல் |
| வா.சா.ஆ.23 | 27.01.2017 | திருப்பூர் தெற்கு இடுவாய் கிராமம் க.ச.எண். 115/10 பட்டா எண். 537 ற்குரிய சிட்டா கணினி நகல் |
| வா.சா.ஆ.24 | 19.01.2017 | கணபதி கவுண்டர் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.25 | 30.12.2013 | கணபதி கவுண்டர் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |

.**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | திரு. பொன்னுசாமி, த/பெ. சின்னமுருகசாமி |

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** :– இல்லை

**5. சாட்சி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | 24.1.2013 | – கணபதிகவுண்டர் ஏற்படுத்திய பதிவு ஏற்படாத உயில் சாசனம் அசல் |
| சா.சா.ஆ.2 | | சாட்சியின் பழனிசாமியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது – ஒளி நகல் |

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2026.03.26 18:36:05 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

Fair / Draft Judgment
in
O.S.No. 411/2019
ASJ Court – Tiruppur.
Dated : 26.03.2026